உ

சிவமயம்.

திருவொற்றியூர்

# தியாகேசர்

# பஞ்ச ரத்தினம்.

இது

திரு - சிவாநந்தசாகர யோகீசுவரரவர்கள் மாணுக்கரும்

சென்னை-புரோக்ரஸிவ் யூனியன் பாடசாலைத்

தமிழ்ப்பண்டிதருமாகிய

மா - நமசிவாயம்பிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,

மாயூர நகரை யடுத்த வழுவையூர்

மா. க. சோமசுந்தரம் பிள்ளை யவர்களால்

சென்னை

தி. இராஜகோபால முதலியார் அவர்களது

“ஆநந்த குணபோதினி” அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

பிரபவஹு ஆவணிமீ

முதற்பதிப்பு.

1104

Q23:38.211 JV
N28
120286.

தியாகேசர் பஞ்சரத்தினம், வடிவாம்பிகை பதிகம் என்னும் இவ்விரண்டு நூல்களும் காப்பிரயிட் என்கிற சுதந்தரமுடையன. இவை எக்காலத்தும் இனாமாகக் கொடுக்கப்படுமேயன்றி விலைக்கு விற்கப்படா. அச்சிட்டு இனாமாகக் கொடுக்க விரும்புவோர்க்கு ஒரு பதிப்பு அச்சிட்டுக்கொள்ளும்படி அநுமதியளிக்கப்படும். மா. ந. பி.

## மேற்கோள்

### திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

மண்ணாகிவிண்ணாகி மலையுமாகி
வயிரமுமாய்மாணிக்கந் தானேயாகிக்
கண்ணாகிக்கண்ணுக்கோர் மணியுமாகிக்
கலையாகிக்கலைஞானந் தானேயாகிப்
பெண்ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப்
பிரளயத்துக்கப்பா லோரண்டமாகி
எண்ணாகியெண்ணுக் கோரெழுத்துமாகி
யெழுஞ்சுடரா யெம்மடிகணின்றவாறே. (௧)

மண்ணல்லைவிண்ணல்லை வலயமல்லை
மலையல்லைகடலல்லை வாயுவல்லை
எண்ணல்லையெழுத்தல்லை யெரியுமல்லை
யிரவல்லைபகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லையாணல்லை பேடுமல்லை
பிறிதல்லையானாயும் பெரியாய்நீயே
உண்ணல்லைநல்லார்க்குத் தீயையல்லை
யுணர்வரியவொற்றியூ ருடையகோவே. (௨)

### திருவாசகம்.

களிவந்தசிந்தையொடுன்கழல்கண்டுங்கலந்தருள
வெளிவந்திலேனை விடுதிகண்டாய்மெய்ச்சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழலுத்தரகோசமங் கைக்கரசே
எளிவந்த வெந்தைபிரானென்னை யாளுடையென்னப்பனே (௩)

உ

சிவமயம்.

## திருவொற்றியூர்த்

# தியாகேசர் பஞ்சரத்தினம்.

காப்பு.

**கலிவிருத்தம்.**

பூமனன்றறியாதபொருண்மிகும்
ஓமெனும்பதவொண்வடிவாய்வந்து
நாமமுன்னுவர்நற்செயலையினி
தேமுடித்திடுதேவனையேத்துவாம்.

நூல்.

நித்தனேநிமலனே நிட்களப்பிரமமே
நிகழ்சகளமருவுதேவே
நீங்காதவிருநான்கு குணமேவுமொருவனே
நிர்க்குணப்பரமபதியே
அத்தனேயண்ணலே யரியவொளிரூபனே
அவனிமுழுதாட்டுதற்கே
அருணடம்புரிதகைப் பரமனேவெள்ளிமலை
யதிபதித்தெய்வமுதலே
சுத்தனேசத்தனே துரியனேயரியனே
துரியங்கடந்தசிவமே
சொல்லுநவபேதமாயல்லவாம்வல்லனே
தூய்மைசெறியட்டமிகுமா
சித்தனேகர்த்தனே சிறியனேன்சொன்மாலை
சேவடியணிந்தருளுவாய்
திருவொற்றியூர்வாச அருமைத்தியாகேச
* திருமிக்குமாநேசனே. (க)

* இது திரு மிகு உமா நேசனே எனப் பிரிபடும், இதன் பொருள் அழகு மிகுந்த உமாதேவிக்கு நாயகனே என்பது.

நீரோங்குவாராழி சூழுமிப்புவியாதி
நிற்குமகிலாண்டமெல்லாம்
நிகழுமிரு * மிரவிமதி யொடுவங்கிதாரைக்கு
நிகரற்றவொளியையீந்தும்
ஊரோங்குபடிமீது நடைபுரிந்துயிருள்ளு
மூனரம்பென்பினுள்ளும்
உவட்டாதினிக்கின்ற வொண்டமிழ்ப்பாமாலை
யொழியாமலேற்றணிந்தும்
பாரோங்குமறைமுடிச் சிவஞானபோதநிதி
பற்றிவாழ்ஞானியர்க்கே
பற்றுமலமபய மொழித்தென்றுமாறாத
பணிநிழலளித்துமன்னும்
சீரோங்குசேவடித் தெய்வமேநினதருட்
செல்வமீந்தாதரிப்பாய்
திருவொற்றியூர்வாச அருமைத்தியாகேச
திருமிக்குமாநேசனே. (உ)

மூலமலமுதன்மூன்று மனவிட்டவிதையென்ன
மூடுசெயலற்றுநிற்க
மூவாதபசுவாய்ந்து முடுகவும்பதிவிரைவின்
முன்னுறக்கனலிகண்ணின்
காலுமொளியைப்போன் றிரண்டொன்றெனுவாறு
கலப்புறும் பெற்றியதனைக்

---

* இரவி முதலியவற்றிற்கு இறைவன் திருவடி ஒளியீதலை மேற்காட்டியுள்ள திருவாசகச் செய்யுளானறிக.

காட்டியும் * மேருவரை வில்லாய்வளைத்தும்வேள்
கனிவுடனணைத்தெடுத்தும்
கோல்மிகுவாசகங் கோவைமுதலானபல
குழைதமிழ்ப்பாவரைந்தும்
கோதிலாத்தமிழ்மணங் கொண்டுமான்மழுவொடுங்
கூறபயவரதமீந்தும்
சீலமிகமன்னியொளிர் கையுடையவையனே
சிறியேனையாதரிப்பாய்
திருவொற்றியூர்வாச அருமைத்தியாகேச
திருமிக்குமாநேசனே. (௫)

† கண்ணுருமுலகுதித் திடவின்றியமையாத
காரணம்மூன்றுமில்லை
காண்பனவெலாமிங் கியற்கையேயென்பதொடு
காலதிக்காதியில்லை
பண்ணுருமறையினிரு தயமாயிலங்குபதி
பசுபாசமில்லையெனவும்
பகர்கின்றகன்மனக் கொடியரைக் கனவிலும்
பாராதிருக்கவருள்வாய்

---

* பசு (ஜீவான்மா) வானது திருவருள் விளக்கத்தாற் பதியைத் தேடிச் செல்லுங்காலத்து, பதி எதிர் வந்து தோன்றும். அப்பொழுது ஆணவாதி மும்மலங்கள் வறுத்த வித்தைப்போற் செயலற்றொடுங்க, ஒன்றென்றும் இரண்டென்றும் விவகரித்தற் கிடந்தாராவாறு, கண்ணொளி கதிரொளியோடு கலத்தல் போல, பசு பதியோடு கலந்து சிவாநந்தத்தை அனுபவித்திருத்தலே பாமுத்தியெனப்படும். இதுவே இருக்காதி நான்மறைகளின் முடிந்த நிலையென, கண்ணுதற் பெருமான் கல்லாலினடியில் சனகாதி நால்வர்க்குச் சின்முத்திரையாற் காட்டினர் என்பதை விளக்கியபடியாம்.

† கண் = பெருமை.

* "மண்ணாகிவிண்ணாகி மலையாகி" எனலலான்
"மண்ணல்லை விண்ணுமல்லை
வலயமலைமலையல்லை கடலல்லை" எனலாதி
மாமறைமொழிக்கிலக்காய்த்
திண்ணேறுமண்டவகை யாவுமாயல்லவாய்த்
திகழ்ந்தொளிருகின்ற சிவமே
திருவொற்றியூர்வாச அருமைத்தியாகேச
திருமிக்குமாநேசனே. (௪)

உலகுதொழுமன்பர்பல ருனதரியமகிமைகளை
யோர்ந்துபலபணிபுரிந்தே
உன்னரியநின்னருட் செல்வமார்ந்தொழியாத
வுயரின்பமடைவதோர்ந்தும்
நிலவுநீபதியுனது நிலையடிமை யானெனும்
நெறியதனை நன்குணர்ந்தும்
நின்னடிக்கன்புசெய வொட்டாமலாட்டியே
நீங்காததுன்பிலாழ்த்தி
நலவுலகிலாள்பவர்க ளில்லாதுபலரிடமு
நாளுமடியுண்பசுப்போல்
நலிவுறச்செய்யுமென தூழினைச்சேதித்து
நற்கதியளித்திடாயோ
திலமருவுதைலமென வுலகெலாம்பரவியே
திகழ்தரும்பரம்பதியாந்
திருவொற்றியூர்வாச அருமைத்தியாகேச
திருமிக்குமாநேசனே. (௫)

## தியாகேசர் பஞ்சரத்தினம்
முற்றிற்று.

---

* மேற்காட்டியுள்ள திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரமாகும்.

உ

சிவமயம்.

திருவொற்றியூர்

# வடிவாம்பிகை

# பதிகம்.

இது

திரு-சிவாநந்தசாகர யோகீசுவரரவர்கள் மாணவரும்

சென்னை-புரோக்ரஸிவ் யூனியன் பாடசாலைத்

தமிழ்ப்பண்டிதருமாகிய

மா. நமசிவாயம் பிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,

மாயூர நகரையடுத்த வழுவையூர்

மா. க. சோமசுந்தரம் பிள்ளை யவர்களால்

சென்னை

தி. இராஜகோபால முதலியார் அவர்களது

“ ஆநந்த குணபோதினி ” அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

பிரபவஞு ஆவணிமீ

## மேற்கோள்

## சேக்கிழார் சுவாமிகள் புராணம்

இமயமலையரையன்மக டழுவக்கச்சி
யேகம்பர்திருமேனி குழைந்தனுன்று
சமயமவையாறினுக்குந்தலைவிக்கீசர்
தந்தபடியெட்டுமுக்கி ராழிநெல்லும்
உமைதிருச்சூடகக்கையாற் கொடுக்கவாங்கி
யுழவுதொழிலாற்பெருக்கி யுலகமெல்லாந்
தமதுகொழுமிகுதிகொடு வளர்க்கும்வேளாண்
டலைவர்பெரும் புகழுலகிற்றழைத்ததன்றே.

### குறிப்பு

மதியை உவாவன்று காட்டி என்றது :—அபிராமிப்பட்டர் அமாவாசை கூடிவருந் தினத்தை, தவருய்ப் பௌர்ணமி கூடிவருந் தினமென்று அரசனுக்குச் சொன்னதைத் தாபிக்கும்பொருட்டு, அப் பட்டர் தேவியைப் பிரார்த்தித்து அபிராமியந்தாதி பாடுங்கால்; அச்செய்யுளைக்கேட்டு மகிழும் உமாதேவியார், தமது திருச்செவியில் அணிந்திருந்த கம்மலைக் கழற்றி ஆகாயத்திலெறிய, அது பூரணைச் சந்திரன் தோன்றினற்போற் பிரகாசித்ததென்னும் அற்புதத்தைச் சுட்டியபடியாம்.

உயர்மணித் தொடையலீந்தும் என்றது:—குமாகுரு சுவாமிகள் மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றத் தொடங்கிய காலத்து, உமாதேவியார் பாண்டியனது பெண்குழந்தைபோல் அங்கு வந்து அவன் கழுத்தில் அணிந்திருந்த நவமணிமாலையை யெடுத்துக் குமாகுரு சுவாமிகள் கழுத்திற் போட்டுவிட்டு மறைந்த அற்புதத்தைச் சுட்டியபடியாம்.

17086

சிவமயம்

திருவொற்றியூர்

# வடிவாம்பிகை பதிகம்.

சுத்தமணிபத்மமிகு தோன்றிமலரொத்திலகு
சூடகக்கையினாலே
தொன்மையுலகுயிரெலா மின்பமுற்றுய்யவே
தூயவிருநாழிநெல்லை
உத்தமகுலத்தில்வரு முழவருக்கருளியீண்
டுற்றறம்வளர்த்தவளே நீ
ஒளிவீசுமுழுமதியு வாவன்றுகாட்டிமிக
வுயர்மணித்தொடையலீந்தும்
பத்திமிகு மற்புதச் சொற்றழை சுவைத்தமிழ்ப்
பாக்கடலை யேற்ற செவியில்
பரிவற்றமனமுற்ற வெனதற்பமொழிகொண்ட
பாடலு முவந்து கேட்பாய்
நித்திலத்தொளிகண்டு நிலவெனப்பகலிலலர்
நீலக்கயங்கண்மேவு
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்ற வடிவம்மையே. (க)

---

பத்மமிகு = பதுமநிதியின்மிகுந்த, தோன்றி = காந்தள், சூடகம் = வளையல்.

பார்மருவுமிரவியென வகலாதவொளிவீசு
பாடகந்தண்டைவாய்ந்த
பங்கயச்செழுமலரை யொத்தவிருபாதமும்
பரவுமேகலையினோடு
சீர்மருவுசித்திரப் பட்டாடையணிமேவு
செம்பொன்செயொட்டியாணம்
திகழுமின்னிடையுமா மணிமுத்துமாலையொளி
சேருமாங்கல்யகளமும்
கார்மருவுமெய்யடிய ரடையிலஞ்சேலெனடி
நளிர்நிழலளிப்பவென்ன
நவிலுமுன்னிருகையங் குசபாசமேந்துமிரு
நளினகரமிந்துமுகமும்
நீர்மஞ்செனுங்குழலு மேவுவடிவாமுன்னை
நித்தந்துதிக்கவருள்வாய்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்றவடிவம்மையே. (௨)

சுத்தபரிபூரணி மனோன்மணியிமாசலத்
தூய்மலருதித்தவல்லி
சுருதிகள்வழுத்துமபி ராமிவாலாம்பிகை
சூலியிடமேவுநிமலி
உத்தமமஹாதேவி யுயர்புவனமர்தங்கி
யோதுதிரிபுரைகுமாரி
உல்லாசமிகுரூப கல்யாண சுந்தரி
யுச்சிதமிகுந்தகௌரி
சத்தியந்தரியமலை சாம்பவியுமாதேவி
சங்கரியருங்கண்வாமி

தன்னேரிலாதமர கதவல்லிமாயவன்
றங்கையயிராணியென்றே
நித்தமுனையுழுவன்மிகு பத்தியொடுநாயினேன்
நின்றுதுதிசெய்யவருள்வாய்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்றவடிவம்மையே. (௫)

உலகுவகையாமளவின் மலர் தருந்தாருவே
யும்பர் முடி தங்குமணியே
உலவாதநிதியருளு நிதியமேவானுலக
வொய்யாரமேவுமயிலே
பலமருவுபொன்வெள்ளி மலைமீதுலாவிவரு
பச்சைப்பசுங்கிள்ளையே
பருகாதவமுதமே குறையாதமதியமே
பவவிருளகற்றுமொளியே
குலவுமிகுதத்துவக் கானுழைக்குழவியே
கோமளமருதகொடியே
கோதிலாப்பத்தர்மன மலர்மீது தங்கி வாழ்
கூரருட்கண்ணன்னமே
நிலமருவுகருணைமுகி லேயெனது துன்பெலாம்
நீக்கியேயடிமைகொள்வாய்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்றவடிவம்மையே. (௬)

உருவமுடனருவமரு வுருவமாயெங்குநிறை
யுயர்பாசிவத்தினீங்கா
துற்றகுணகுணியெனவ பேதமாய்மன்னியொளி
ரொப்பிலாப்பெரியசத்தி

மருவுமாசாவசர மியாவுமொருநிமிடநின்
மாணித்தமீனிளுட்சி
மன்னுமொருமகிழினடி றன்னிடுந்தியாகேசர்
மாநடங்கண்டுமகிழ்வின்
அருகினிலிருந் துருகு மன்பருக்கதையூட்டும்
ஆனந்தரூபவன்ளுய்
அசுரரைக்காய்வீர சத்திவே லறுமுகற்
கந்நாளளித்தநிமலி
நிருமலீயடியேனை நித்தமும்வருத்துநோய்
நீக்கியின்றடிமைகொள்வாய்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழூற்றவடிவம்மையே. (ரு)

பன்னுமா மறையின்முடி வானபொரு ளிஃதலாற்
பகரேனையவைகளெல்லாம்
பக்குவமிலாதபல மாந்தர்கட்காகவே
பகார்த்தவாதமெனவும்
முன்னளிலேயரன் கல்லாலினீழலின்
மொழிந்துமுணராதபல்லோர்
முடிவுணர்ந்துய்யவுங் கொடியபலசமண்ணி
மூடமததிமிரமறவும்
கன்னேருநெஞ்சையுங் கனியழலின் மெழுகெனக்
கரைதரும்வேதநல்கக்
காழிவேந்தர்க்கன் று பாலமுதமூட்டிமெய்க்
கருணைமழைபெய்தமுகிலே
நின்மலமிலாவலிய கன்மனக்கொடியேற்கு
நின்பதத்தொண்டுதருவாய்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழூற்றவடிவம்மையே. (சு)

வட்டவடிவாமுலகு வாழடியரெல்லோரு
மன்னுமன்னுயென்னவே
வாய்விட்டழைக்கவுஞ் செல்லாதுகாஞ்சன
மாலையாம் பைமையோடு
மட்டிலாப்புகழ்மேவு மலையினரையன்றேவி
மாமேனைமாதினுக்கும்
மகிழ்தருங்குழவியாய் விளையாடிமழலைமொழி
மருவப்புகன்றதல்லால்
இட்டமிகவம்மவம் மாவென்றழைத்தின்ப
மீந்தன்னவூர்திமுன்னோர்க்
கெட்டாதபரனடிது லக்குமுயர்பேறீந்த
வின்பப்பசுங்கிள்ளையே
கிட்டைபுரிஞானியர்க ளாகுமுன்றொண்டரொடு
நேர்ந்தடிமைசெய்யவருள்வாய்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்றவடிவம்மையே. (௭)

சொல்லாருமலர்மாத ரிருவர்செய்பணிகொண்ட
சுந்தரமிகுந்ததேவி
துரியமேனிலைகடந் தொளிர்சிவமணந்துவாழ்
சுருதிகாண்பரியதேவி
வல்லாளுமதியிரவி யெல்லாருமிருகையான்
மறைத்துவிளையாடுதேவி
வனவல்லிசுரவேழ மாதருக்காசிபல்
மணிவாய்மலர்ந்ததேவி
எல்லாருமுடிபுனைந் தினியசெங்கோலேந்தி
யீண்டரசிழைத்ததேவி
இவனல்லனலனென்ன மனமுன்னிடாமலே
யெனதுவன்றுயரொழிப்பாய்

நில்லாதுமாபாவ கன்மவினை வகையாவு
நீருக்கிவீடளிக்கும்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்ற வடிவம்மையே. (அ)

மாங்குயிலைநேருமொழி மங்கையருமாடவரு
மகிழடிப்புனலின்மூழ்கி
மன்னுபலகைநாதர் தியாகேசர்தமையேத்தி
வலம்வந்துநினதுதிருமுன்
திங்கிலாத்தேன்தினை மாவினொடுதாமரைத்
திரிவசுப்பசுவினெய்யுந்
திஞ்சருக்கரைபழங் கொண்டொளிர்விளக்கினொடு
தீபதூபங்களிட்டே
ஆங்குநாற்பத்தெட்டு முறைநின்னையமைதியா
யன்புடன்சுற்றியுள்ளம்
அனலின்மெழுகாய்ப்பணிவதைக்கண்டுமெனதுமன
மணுவளவுமிளகவொட்டா
நீங்காததுட்டவினை யின்செயலொழித்துனடி
நித்தந்துதிக்கவருள்வாய்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்றவடிவம்மையே. (கூ)

---

தாமரைத்திரி = தாமரை நூல். வசுப்பசு = கோயற்றதும் அங்கப் பழுதற்றதும் கன்றையுடையதுமாகிய பசு. இங்ஙனமின்றி எருமை ஆடு முதலியவற்றின் அசுத்தமிகுந்த நெய்யைக் கொண்டு விளக்கிடுதல் குற்றமாம். அப்படிச் செய்வது, குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுதல் போலாம்.

நாற்பத்தெட்டு முறை பிரதட்சிணஞ் செய்வது, மண்டலப்பிரதட்சிணமெனப்படும். இது விரைவில் மிகுந்த பலனளிக்கக்கூடியதெனச் சிவாகமங் கூறும்.

பொல்லாதமிடியோடு மலகைவன்பிணியோடு
புல்லர்புரியிடரினோடும்
போர்புரிந்தேயிளைத் தவைதமக்கடிமையாய்ப்
பொங்கிடுந்துன்பிலாழும்
கல்லாகுமனமுடைய நாயினேற்குன துகண்
கடையருளைநல்கியோங்கு
கன்மவினையென்னுமேற் சொன்னமிகுதுயரெலாங்
கனலிடும்பஞ்சுபோல
இல்லாதொழித்துனடி யெந்நாளுமேபரவி
யின்புற்றிருக்கவருள்வாய்
எமதுகுடிமுழுமையுங் காத்திடக்கொத்தடிமை
யேய்வுறக்கொண்டவன்னாய்
நில்லாததேகத்தை நெடுநாளிருத்தியுயர்
நிட்டைபுரிவோர்கள்வாழும்
நிறையொற்றிநகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்றவடிவம்மையே. (௰)

வேறு.

அருமைமிகுநினதுபத வெகினமெனதிதயமல
ரகலாதிருத்தல்வேண்டும்
அம்மலரிலென்றுமென தன்பெனுந்தண்மையார்ந்
தழியாதிருத்தல்வேண்டும்
உருவமுளவம்மலர் செழித்தோங்கவுதகமா
முன்னடியரேவல்வேண்டும்
உயிர்ப்பலிகொளுஞ்சிறிய தெய்வவழிபாட்டையா
னுன்னாதிருத்தல்வேண்டும்
[illegible]நனிலுயாாலினடி யீசனருண் ஞானமிகு
போதநெறிநிற்றல்வேண்டும்

பொல்லாதசோகுநோய் மிடியெனைக்கனவிலும்
பொருதாதிருத்தல்வேண்டும்
நிருதர்குலகாலனும் புலவரேறின்மரபை
நேர்ந்துதமிழ்பாடவேண்டும்
நிறைபொருள்நிகர்பெற்ற நிகரற்றநிதியமாய்
நிகழுற்றவடிவம்மையே. (௧௧)

வடிவாம்பிகை பதிகம் முற்றிற்று.

---

17038

இந்நூல் கிடைக்குமிடங்கள்.

சித்தாந்தம். நல். கண்ணப்ப முதலியார்,
நெ. ௪௪, பங்காருநாயக்கன்தெரு,
திருவேட்டீசுவரன் பேட்டை, சென்னை.

---

தி. வி. இராஜரத்தின முதலியார்,
நெ. ௪ குப்பையர் தெரு சென்னை.

---

தி. இராஜகோபால முதலியார்,
"ஆநந்த குணபோதினி" ௬௦௨, தங்கசாலைத் தெரு, சென்னை.